# பட்டு வளர்ப்பு தொழிலில் வெற்றி பெற்ற விவசாயியின் வெற்றிக்கதை

முனைவா். ம.அ. வெண்ணிலா மற்றும் முனைவா். பா.ச. சண்முகம்

தருமபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ப்பு தொழில் பென்னாகரம், பாலக்கோடு மற்றும் தருமபுரி வட்டாரங்களில் அதிகம் பின்பற்றப்பட்டு வருகின்றது. மல்பெரி செடி பயிர் செய்து பராமரித்தல் மற்றும் பட்டுப் புழு வளர்ப்பு செய்தல் ஆகிய இரண்டு செயல்பாடுகள் பட்டு வளா்ப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இதில் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், எர்ணஹள்ளி அஞ்சல், மூங்கில்பட்டி கிராமத்தைச் சார்ந்த திரு.கோ.பாண்டியன் அவர்கள் இந்த பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலை கடந்த இரண்டு வருடங்களாக செய்து வருகின்றார். ஆரம்பத்தில் இவர் கரும்பு, மரவள்ளி, நிலக்கடலை மற்றும் நெல் போன்ற பயிரகளை சாகுபடி செய்து வந்துள்ளார். இவற்றில் போதிய வருமானம் கிடைக்கவில்லை. மேலும் கரும்பில் வேர்ப்புழு பாதிப்பு மற்றும் ஆட்பற்றாக்குறை போன்ற காரணங்களினால் இவர் பட்டுப் புழு வளர்ப்பு தொழிலை செய்ய ஆரம்பித்தார். இவர் பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் பட்டுப் புழு வளர்ப்பு தொழிலை பற்றி அறிந்து கொண்டு மேலும் அதில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை பற்றி வேளாண்மை அறிவியல் நிலையம், பாப்பாரப்பட்டி விஞ்ஞானிகளிடம் கேட்டு தெளிவு பெற்றார். இவர் பட்டுப்புழு வளா்ப்பில் தன்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறாா்.

**மல்பெரி சாகுபடி**

**மண்** : மல்பெரி சாகுபடி செய்ய நீர்பிடிப்பு இல்லாத வண்டல் கலந்த செம்மண் சிறந்தது ஆகும். என்னுடைய நிலத்தின் மண் வகை கார மண் வகை ஆகும்.

**இரகம்** : உயர் விளைச்சல் தரும் V1மற்றும் G4 சுமாா் ஒன்றரை ஏக்கா் நிலத்தில் சாகுபடி செய்தேன்.

**நாற்றுகள்**

நான்கு மாத வயதுடைய மல்பெரி நாற்றுக்களை நடவுக்கு பயன்படுத்தலாம். இணை வரிசை நடவு முறைபடி பாத்திக்கு பாத்தி 2 அடி மற்றும் 5X 3 அடி என்ற இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். மொத்தம் 5100 விதைக்கரணைகள் ஒரு ஏக்கர் நிலத்திற்கு தேவைப்பட்டது.

**நிலத்தை தயாா் செய்தல்**

நடவு செய்ய நிலத்தை நன்கு உழுது தயார் செய்ய வேண்டும். பின்பு 8 டன்கள் தொழு உரம் ஏக்கருக்கு இட வேண்டும்.

**இரசாயன உரமிடுதல்**

ஏக்கருக்கு தேவையான உர அளவு தழைச்சத்து : மணிச்சத்து : சாம்பல்சத்து 140 : 56 : 56 கிலோ ஆகும். இதனை ஒரு ஆண்டுக்கு 5 தடவையாக பிரித்து இட வேண்டும். அதாவது (28 : 11.2 : 11.2 கிலோ) ஒரு ஏக்கருக்கு ஒரு இலை அறுவடைக்கு தேவைப்படும் இதனை 40 கிலோ அம்மோனியம் சல்பேட், 70 கிலோ சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 19 கிலோ மியூரேட் ஆப் பொட்டாஷ் ஆக இட வேண்டும். அடிபுறத்திலுள்ள பக்க சிம்புகளை 20 வது நாள் அகற்ற வேண்டும் 54 நாளாவது நாள் இளம் புழு வளர்ப்பு மையத்திலிருந்து பட்டுப்புழுக்களை பெற்று தண்டு அறுவடை முறையில் பட்டுப் புழு வளர்ப்பு செய்தேன்.

**புழு வளர்ப்பு**

- தண்டு அறுவடை முறையில் தாங்கிகளில் வளர்க்கப்படும் பட்டுப்புழுக்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறைகள் உணவு கொடுக்க வேண்டும்.
- பட்டுப்புழுக்களின் உணவுத் தேவைக்கு ஏற்ற அளவு மல்பெரி இலைகளை போட வேண்டும்.

- இலைகள் வாடுவதை தவிர்க்க உணவு அளித்த பின் செய்தித்தாளை பயன்படுத்தி இரண்டு மணி நேரம் படுக்கையை மூடி வைத்து விட வேண்டும். பட்டுப்புழு வளர்ப்பு மனையில் நல்ல காற்றோட்ட வசதி இருக்க வேண்டும். கோடைக்காலத்தில் வெப்பநிலையை குறைக்க அறைக்கு வெளியே சொட்டு நீர்க்குழாய்களை தொங்க விட்டு நீர் சொட்டும் படி செய்துள்ளேன். இதனால் அறை மிகவும் குளிர்ச்சியாக உள்ளது. வெப்பம் குறைவாக உள்ளது. ஜன்னல்களில் ஈரச்சாக்குகளை தொங்க விட்டுள்ளதால் ஈரம் உலரவிடாமல் பராமரிக்கப்படுகிறது. பட்டுப்புழு பருவத்திற்கு ஏற்றவாறு அறையின் வெப்பம் மற்றும் ஈரப்பதத்தினை பராமரிப்பதில் தனிகவனம் தேவை.
- குளிர்க்காலத்தில் குறைந்த வெப்பம் மற்றும் ஈரப்பதம் இருப்பதால் புழுக்கள் உணவு உண்ணும் திறன் குறைந்து போதிய உணவை உட்கொள்ளாது. ஆதலால் புழுக்களின் பருவத்திற்கேற்ற தட்ப வெட்ப நிலையை பராமரிப்பதில் கவனம் தேவை.
- குளிர்காலத்தில் வெப்பம் அதிகரிக்க தணல் சட்டியினை ஆங்காங்கே வைத்தேன். பட்டுப்புழு கூடு கட்டும் அறையில் 26’C வெப்பமும் 60-65 சதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். நெட்ரிக்காவினை நன்கு கிருமி நாசினி செய்த பின்பு கூடு கட்ட பயன்படுத்தினேன்.
- கூடு கட்டிய 6 வது நாள் கூடுகனை அறுவடை செய்யலாம். பட்டுக்கூடு அங்காடிக்கு எடுத்து செல்லும் போது அறுவடையான கூடுகளில் இரட்டைக் கூடுகள் மற்றும் கறை படிந்த கூடுகள் ஆகியவற்றை தனியாக பிரித்து எடுத்து சென்றேன்.
- புழு வளர்ப்பு அறையில் பிளிச்சிங் பவுடர் 2 சத கரைசல் தெளித்தேன். ஒரு பங்கு பிளிச்சிங் பவுடரை19 பங்கு நீர்த்த சுண்ணாம்புக் கரைசலுடன் கலக்கினால் 2 சதம் பிளிச்சிங் பவுடர் கலவை கிடைக்கும்.
- கிருமிநாசினியாக அஸ்தரா ஒரு சதுர அடிக்கு 250 மி.லி கரைசல் வீதம் தெளிப்பான் கொண்டு தெளித்தேன்.

**வருமானம்**

| விவரம் | ரூபாய் |
|---|---|
| **மல்பெரி தோட்ட பராமரிப்பு**<br>**தோட்ட செய் நேர்த்தி முறைகள்**<br>நாற்று<br>நடவு கூலி<br>களை பறிக்க (8 நபர்கள் X 200)<br>தொழு உரம் (8 டன் @ ரூ.1000/- டன்<br>இராசயன உரம்<br>(அம்மோனியம் சல்பேட்<br>680 கிலோ)<br>(சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் 350 கிலோ<br>மியூரேட் ஆப் பொட்டாஷ் 94 கிலோ)<br>களை மேலாண்மை (3 முறை)<br>மின்சாரம் + மற்றவை | 5200<br>14000<br>1600<br>8000<br>1000<br>15000<br>2000<br>800<br>500 |
| **மொத்தம்** | **48100** |
| **புழு வளர்ப்பு**<br>வளர்க்ககூடிய முட்டை தொகுதிகள்<br>(130 முட்டை தொகுதிகளுக்கு ரூ. 715 வீதம்<br>(130 முட்டை தொகுதிகள் X 10 புழு வளர்ப்பு)<br>புழு வளர்ப்பு செய்ய தேவையான கிருமிநாசினி<br>மற்றும் இடுபொருட்கள்<br>(130 முட்டை தொகுதிகளுக்கு ரூ1500 வீதம் 1300 முட்டை தொகுதிகளுக்கு | 7150<br>15000 |
| **மொத்தம்** | **22150** |
| **வரவு** | |

| | |
|---|---|
| பட்டு கூடுகள் 130 முட்டை தொகுதிகளுக்கு 100 கிலோ வீதம் 1300 முட்டை தொகுதிகளுக்கு<br>1000 கிலோ X ரூ. 370 | 1000 கிலோ |
| பட்டு கூடுகளின் சராசரி விலை | 350 |
| பட்டு கூடுகளின் விற்பனை மூலம் வருவாய் | 320000 |
| **நிகர வருமானம் ஓராண்டிற்கு** | **249750** |

எனவே பட்டுப்புழு வளர்ப்பின் மூலம் ஆண்டுக்கு ரூபாய் இரண்டு லட்சம் வரை நிகர வருமானம் கிடைக்க பெற்றேன். எனவே மற்ற விவசாயிகளும் பிற பயிர்களை பயிரிடும் பரப்பளவில் ஒரு பகுதியை பட்டுப்புழு வளர்ப்பிற்கு ஒதுக்கினால் ஆண்டு முழுவதும் நிரந்தர வருமானம் பெறலாம்.

முகவரி
திரு. கோ. பாண்டியன்
த/ பெ. கோவிந்தன்
மூங்கில்பட்டி கிராமம்
எர்ணஹள்ளி அஞ்சல்பாலக்கோடு வட்டம்
தருமபுரி மாவட்டம்
அலைபேசி 9788938757



